# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:100 ★11.08.2026 ★தமிழ் நாளிதழ் ★செவ்வாய்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:100 ★11.08.2026 ★TamilDaily ★Tuesday ★Page-4 ★Price-₹5/- Chennai


## திருவண்ணாமலை புறவழிச்சாலைக்கு ரூ.623.28 கோடி ஒதுக்கீடு: 22.71 கி.மீ. சாலைப் பணி 2 ஆண்டுகளில் நிறைவு

## நகரில் போக்குவரத்து நெரிசல் குறையும்

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட திருவண்ணாமலை புறவழிச்சாலை திட்டத்திற்கு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் டெண்டர் வெளியிட்டுள்ளது. ரூ.623 கோடியே 28 லட்சம் மதிப்பிலான இத்திட்டத்தின் மூலம் 22.71 கி.மீ. நீளத்துக்கு புறவழிச்சாலை அமைக்கப்பட உள்ளது. பணிகளை 2 ஆண்டுகளில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை நகரில் அண்ணாமலையார் கோயிலுக்கு வரும் பக்தர்கள், உள்ளூர் வாகனங்கள் மற்றும் வெளிமாவட்டங்களில் இருந்து செல்லும் கனரக வாகனங்கள் உள்ளிட்டவற்றால் அடிக்கடி கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. புதிய புறவழிச்சாலை பயன்பாட்டுக்கு வந்தால், நீண்ட தூர வாகனங்கள் நகருக்குள் நுழையாமல் மாற்றுப்பாதையில் செல்ல முடியும் என்பதால் போக்குவரத்து நெரிசல் கணிசமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**22.71 கி.மீ. நீளத்தில் புறவழிச்சாலை**

புதிய புறவழிச்சாலை, தேசிய நெடுஞ்சாலை 38ஐ ஒட்டிய வேலக்கண்டல் அருகே தொடங்கி, திருவண்ணாமலை நகரை ஒட்டி எண்டால் அருகே முடிவடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

மொத்தம் 22.71 கி.மீ. நீளமுள்ள இந்தத் திட்டத்தில், சுமார் 13.1 கி.மீ. தூரம் புதியபசுமைவழிப்பாதையாகஅமைக்கப்பட உள்ளது. மீதமுள்ள 9.6 கி.மீ. தூரம் ஏற்கனவே உள்ள தேசிய நெடுஞ்சாலை 77 வழித்தடத்தை மேம்படுத்தி பயன்படுத்தப்பட உள்ளது. இதனால் புதியதாகநிலம்கையகப்படுத்த வேண்டிய தேவை கணிசமாக குறையும்.

**100 கி.மீ. வேகத்தில் பயணிக்கலாம்**

அணுகல் கட்டுப்படுத்தப்பட்ட சாலையாக புறவழிச்சாலை வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சந்திப்புகள், இணைப்புச் சாலைகள் மற்றும் சேவைச் சாலைகள் வழியாக மட்டுமே வாகனங்கள் சாலைக்குள் நுழைந்து வெளியேற முடியும்.

இந்தச் சாலையில் மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் வாகனங்கள் பயணிக்கும் வகையில் கட்டமைப்பு உருவாக்கப்பட உள்ளது. நீண்ட தூரப் போக்குவரத்தை நகர்ப்புற உள்ளூர் போக்குவரத்தில் இருந்து பிரிப்பதன் மூலம் தடையற்ற பயணத்தை உறுதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**25 கி.மீ. சேவைச் சாலைகள்**

புறவழிச்சாலை திட்டத்தின் ஒரு பகுதியாக 25 கி.மீ.க்கும் அதிகமான சேவைச் சாலைகளும், 6 கி.மீ.க்கும் அதிகமான இணைப்புச் சாலைகளும் அமைக்கப்பட உள்ளன.

இதன் மூலம் புறவழிச்சாலையை ஒட்டியுள்ள கிராமங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு எளிதான போக்குவரத்து இணைப்பு கிடைக்கும்.

இந்தப் பாதை தேசிய நெடுஞ்சாலை 77, மாநில நெடுஞ்சாலைகள் 236, 6, 9A, 9 உள்ளிட்ட முக்கிய சாலைகளையும், மாவட்ட மற்றும் கிராமச் சாலைகளையும் இணைக்கும்.

**3மேம்பாலங்கள்;10கீழ்ப்பாலங்கள்**

போக்குவரத்து தடையின்றி நடைபெறும் வகையில் திட்டத்தில் 3 மேம்பாலங்கள் அமைக்கப்பட உள்ளன. அவற்றில் ஒன்று வேலக்கண்டல் தொடக்கப் பகுதியில், மற்றொன்று எண்டால் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை 38ஐ இணைக்கும் முனையத்தில், மேலும் ஒன்று தேசிய நெடுஞ்சாலை77சந்திப்பிலும்அமைய உள்ளது.


மேலும், 5 வாகனக் கீழ்ப்பால ங்களும், 5 இலகுரக வாகனக் கீழ்ப்பாலங்களும் அமைக்கப்பட உள்ளன. தற்போதுள்ள NH77 சாலையில் 4 சிறிய பாலங்கள் புனரமைக்கப்படுவதுடன், 19 சிறுபாலங்களும் அகலப்படுத்தப்பட உள்ளன.

**நகருக்குள் செல்லும் பயணம் 13.5 கி.மீ. குறையும்**

புறவழிச்சாலை பயன்பாட்டுக்கு வந்த பிறகு, நகரின் மையப்பகுதிக்குள் நீண்ட தூர வாகனங்கள் செல்ல வேண்டிய நிலை பெருமளவில் குறையும். இதன் மூலம் வாகனங்கள் கடக்க வேண்டிய தூரம் சுமார் 13.5 கி.மீ. வரை குறையும் என்றும், பயண நேரத்தில் சுமார் 30 நிமிடங்கள் வரை மிச்சமாகும்என்றும்எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக போளூர், செய்யாறு, ஆரணி, காஞ்சிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சேலம் அல்லது செங்கம் நோக்கிச் செல்லும் வாகனங்கள், திருவண்ணாமலை நகருக்குள் நுழையாமல் புறவழிச்சாலையைப் பயன்படுத்த முடியும்.

**மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் நேரடி இணைப்பு**



திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைந்துள்ள வேலனந்தல் கிராமம் அருகிலும் இந்த புறவழிச்சாலை நேரடி இணைப்பை வழங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், தண்டராம்பட்டு மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தற்போது மேற்கொள்ளும் சுமார் 25 கி.மீ. சுற்றுப்பயணம், புறவழிச்சாலை அமைந்த பிறகு சுமார் 10 கி.மீ. நேரடி பயணமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தேசிய நெடுஞ்சாலை 38க்கு முக்கிய இணைப்பு**

வேலூரில் தொடங்கி தூத்துக்குடியில்உள்ளவ.உ.சிதம்பரனார் துறைமுகம் வரை சுமார் 604 கி.மீ. நீளத்தில் செல்லும் தேசிய நெடுஞ்சாலை 38க்கு திருவண்ணாமலைமாவட்டத்தின்இணைப்பை இந்தப் புறவழிச்சாலை மேலும் வலுப்படுத்தும்.

NH38, NH77 மற்றும் SH236, SH6, SH 9A, SH9 உள்ளிட்ட முக்கிய சாலைகளை இணைப்பதன் மூலம் பெங்களூரு, வேலூர், புதுச்சேரி, சேலம் உள்ளிட்ட நகரங்களுக்கு இடையே செல்லும் சரக்கு வாகனங்களுக்கு தடையற்றமாற்றுப்பாதைகிடைக்கும்.

**பொருளாதாரவளர்ச்சிக்கும்வாய்ப்பு**

புதிய புறவழிச்சாலை மூலம் திருவண்ணாமலை நகரின் போக்குவரத்து நெரிசல் குறைவதுடன், வணிகம், சுற்றுலா மற்றும் சரக்கு போக்குவரத்துக்கும் சாதகமான சூழல் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக அண்ணாமலையார் கோயிலுக்கு வரும் பக்தர்கள் நகருக்குள் நுழையும் வாகன நெரிசலில் சிக்காமல் எளிதாக பயணிக்க இது உதவும்.

புறவழிச்சாலை பணிகள் நிறைவடைந்த பின்னர், அடுத்த 10 ஆண்டுகளுக்கு சாலையின் பராமரிப்பு பணிகளையும் ஒப்பந்ததாரரே மேற்கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

நீண்டகால எதிர்பார்ப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து, ரூ.623 கோடி மதிப்பில் உருவாகும் இந்த 22.71 கி.மீ. புறவழிச்சாலை, திருவண்ணாமலையின் போக்குவரத்து அமைப்பில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கிய உள்கட்டமைப்பு திட்டமாக அமைய உள்ளது.

# நெல், கரும்புக்கான ஊக்கத்தொகை அதிகரிப்பு: சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் அறிவிப்பு

நெல், கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு ஊக்கதொகையை அதிகரித்து முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

அதன்படி, குறைந்த பட்ச ஆதரவு விலையுடன் சன்னரக நெல்லுக்கு ரூ.2,750, பொதுரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.2,600 வழங்கப்படும் என முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் 110 விதியின் கீழ் அறிவிப்பை வெளியிட்டு பேசியதாவது:

விவசாயிகள் நெல் மற்றும் கரும்புகளை பயிரிடவும், அறுவடை செய்திடவும், விற்பனை செய்திடவும் தங்களது உடல், பொருள், ஆவி அனைத்தையும் செலவிட்டு மேற்கொள்கின்றனர்.

தற்சமயம் தமிழ்நாட்டின் நிதிநிலைமை சரியில்லாமல் இருந்தாலும், நெல் மற்றும் கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என கருதி தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லா த அளவில் மாநில அரசின் நெல் மற்றும் கரும்புக்கான ஊக்கத்தொகையை அதிகரிக்கமுடிவுசெய்துள்ளோம்.



## குருமன்ஸ் பழங்குடியினரின் வரலாற்று போராட்டமும் சமூகநீதி மறுப்பும்

தமிழ்நாட்டின் பழமையான 37 பழங்குடி இனங்களில் தொன்மை வாய்ந்த குருமன்ஸ் எனப்படும் குரும்பர் இனம், தங்கள் தொல்பழம் கலாச்சாரத்தையும் மொழியையும் காப்பாற்றியபடிஎல்லைஓரகிராமங்களிலும் மலைப் பகுதிகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். ஆடு மேய்த்தல் மற்றும் விவசாய நிலங்களில் பட்டி போடுதல் போன்ற தொழில்களையேமுதன்மையாககொண்டஇவர்களின் வாழ்க்கை முறையானது, நாடோடியாக காடு மலையிலேயே கழிகிறது. இரவில் வானமே கூரையாகவும், மேய்ச்சல் நிலங்களை தேடி பல மாதங்கள் இடம்பெயர்ந்தும் வாழும் இச்சமூக மக்கள், கடுமையான உழைப்பையும் ஏழ்மையையும் சந்திக்கின்றனர். கல்வி அறிவு மற்றும் முறையான பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டதால், இவர்களில் IAS, IPS அதிகாரிகளோ அல்லது MLA, MP போன்ற அரசியல் பிரதிநிதிகளோ உருவாக முடியாத சூழல் நிலவுகிறது. இவர்களது சமூக சிக்கல்கள் மற்றும் திருமணங்கள் அனைத்தும் பாரம்பரிய முறைப்படியே ஊர் தலைவர்கள் மற்றும் பூசாரிகளால் தீர்த்து வைக்கப்படுகின்றனவே தவிர, காவல் நிலையத்திற்கோ அல்லது பிற சடங்குகளுக்கோஇவர்கள்செல்வதில்லை.அதோடு, சமூக மாற்றத்திற்கு முன்பே விதவை மறுமணம் போன்ற முற்போக்கான பழக்கவழக்கங்களையும் இவர்கள்தங்கள் பண்பாட்டில் இயல்பாகவேகடைப்பிடித்துவந்துள்ளனர். காலின் மெக்கன்சியின் வரலாற்று பதிவுகள், மெட்ராஸ் ஜர்னல்கள், மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆவணங்கள் மற்றும் மானுடவியல் ஆய்வுகள் என அனைத்து வரலாற்று சான்றுகளும் குருமன்ஸ் இனத்தை 'தொல் பழங்குடி இனம்' என்றே தெளிவுபடுத்துகின்றன. 1950ல் மத்திய அரசு இவர்களை 'குருமன்ஸ்' என்ற ஆங்கிலப் பெயரில் SCHEDULED TRIBES (ST) பட்டியலில் சேர்த்த போதிலும், அதன் தமிழ் வடிவங்களான குறும்பா, குரும்பன், குரும்பக் கவுண்டர் போன்ற பெயர்களை முறையாக இணைக்க தவறியது.

தொடர்ந்து வந்த மாநில அரசுகளும் இவர்களை MBC மற்றும் BC பட்டியல்களில் தவறாக சேர்த்ததன் மூலம், உண்மையான பழங்குடியின மக்களுக்கான உரிமைகள் கிடைக்காமல் போயின. ஆங்கில உச்சரிப்பில் உள்ள 'குருமன்ஸ்' என்ற பெயரை படிப்பறிவில்லாத இச்சமூக மக்கள் சான்றிதழ்களில் சரியாக பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதை அரசு இயந்திரம் சாதகமாக பயன்படுத்தி கொண்டது. இதன் விளைவாக, தர்மபுரி போன்ற மாவட்டங்களில் உண்மையான குருமன்ஸ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் மறுக்கப்படுவதும், தொடர்பில்லாத வேறு மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு போலியாக சான்றிதழ்கள் வழங்கப்படுவதுமான பெரும் அநீதி அரங்கேறி வருகிறது.

உயர்நீதிமன்றம் பலமுறை தலையிட்டு, குருமன்ஸ் ஒத்த பெயர்களை ST பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறும், கலாச்சாரத்தின் அடிப்படையில் சான்றிதழ் வழங்குமாறும் உத்தரவிட்ட போதிலும், அரசு அதிகாரிகளும் ஆட்சியாளர்களும் அதனை அலட்சியப்படுத்தி வருகின்றனர். 300க்கும் மேற்பட்ட மனுக்கள் அளிக்கப்பட்டும், 234 சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் 57 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் இந்த மக்களின் நியாயமான குரல் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. 1921ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் சுமார் 15 லட்சத்திற்கும் அதிகமாக இருந்த இச்சமூக மக்கள், அரசின் வரலாற்று தவறுகளாலும் முறையற்ற கணக்கெடுப்பாலும் 2011 கணக்கெடுப்பில் வெறும் 30 ஆயிரமாக குறைத்து காட்டப்பட்டுள்ளனர். சமூகநீதி பேசும் மண்ணில், ஒரு தொன்மை வாய்ந்த ஆதிப் பழங்குடி இனம் தன் அடையாளத்தையும் உரிமையையும் இழந்து மெல்ல மெல்ல அழிக்கப்படுவதை தடுத்து நிறுத்த, உயர்நீதிமன்ற உத்தரவின்படி வெள்ளை அறிக்கை வெளியிட்டு, உண்மையான கணக்கெடுப்புடன் இவர்களுக்கான பழங்குடி சான்றிதழையும் உரிமையையும் உடனடியாக வழங்க வேண்டியது அரசின் மிக முக்கிய கடமையாகும்.

## “தவெகவின் ஐந்து ஆண்டுகள் விவசாயிகளின் பொற்காலமாக இருக்கும்” ஆதவ் அர்ஜூனா

“200 தொகுதியில் வெல்வோம் என சொன்ன திமுக, தனது தேர்தல் அறிக்கையில், விவசாயக் கடன் பற்றி பேசவே இல்லை. அதை முன்னாள் அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர் செல்வமே ஒப்புக் கொண்டார். தவெகவின் ஐந்து ஆண்டுகள் விவசாயிகளின் பொற்காலமாக இருக்கும்” என அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா பேசியதாவது: 200 தொகுதிகளிலும் வெல்வோம் என திமுக உறுதியாக சொன்னது. ஆனால், முதல்வர் விஜய் தன்னை ஒரு விவசாயி எனச் சொன்னதை, இங்கே மூன்று முறை திமுகவினர் பதிவு செய்துள்ளனர். அவரின் முதல் பிரச்சாரம் பரந்தூரில், விவசாயிகளுக்கு தான். அப்போதே, என் வாழ்க்கை விவசாயிகளுக்காக இருக்கும் என்றார்.

எங்களின் வாக்குறுதியில் விவசாயக் கடனை தள்ளுபடி செய்வதாக சொல்லியிருந்தோம். அதை முயற்சியாக எடுத்து, ரூ.5932 கோடியை முதல்வர் விஜய் தள்ளுபடி செய்திருக்கிறார். ஆனால் 200 தொகுதியில் வெல்வோம் என சொன்ன திமுக, தனது தேர்தல் அறிக்கையில், விவசாயக் கடன் பற்றி பேசவே இல்லை. அதை முன்னாள் அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர் செல்வமே ஒப்புக் கொண்டார்.

ஏன் இது குறித்து அவர்கள் பேசவில்லை. விவசாயிகளுக்கு கடன் இருக்குமா, இருக்காதா என திமுகவினருக்கு தெரியாதா? ஒருவேளை திமுக ஆட்சிக்கும் வந்திருந்தாலும், அவர்களுக்கு அந்த எண்ணம் கிடையாது. ஆனால் முதல்வர் விஜய்க்கு இந்த எண்ணம் இருந்தது. சொன்னதை செய்யக்கூடியவர் முதல்வர் விஜய்.

ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அரிசி தரமற்றதாக இருப்பதாகப் பொதுமக்கள் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து அவர்கள் வைக்கும் குற்றச்சாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், பொதுமக்களுக்குத் தரமான அரிசியை வழங்கும் நோக்கத்திலும்தான் சன்ன வகை நெல்லுக்கான ஊக்கத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. நெல், கரும்புக்கான ஊக்கத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. 100% இருந்த கரும்பு சாகுபடி 30 சதவீதமாக குறைந்துள்ளது. கரும்பு உற்பத்தி திமுக ஆட்சியில் 70% சரிந்தது. 5 ஆண்டு ஆட்சியையும், 3 மாத ஆட்சியையும் ஒப்பிடுவது சரியா?. இந்த ஐந்து ஆண்டுகள் விவசாயிகளின் பொற்காலமாக இருக்கும். முதல்வர் விஜய் விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்” இவ்வாறு அவர் கூறினார்.




**தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779

# திருவண்ணாமலையில் ஆக.14ல் மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம்:30க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்பு;

## 500க்கும் மேற்பட்ட பணியிடங்களுக்கு தேர்வு

திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்புமற்றும்தொழில் நெறி வழிகாட்டும் மையம் சார்பில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் வருகிற ஆகஸ்ட் 14ம் தேதி நடைபெற உள்ளது.

திருவண்ணாமலை மாவட்ட வேலை வாய்ப்புமற்றும்தொழில் நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் அன்று காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும் இந்த முகாமில், 30க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள் பங்கேற்று, 500க்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களுக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்ய உள்ளன.

இந்த முகாமில் 8ம் வகுப்பு, 10ம் வகுப்பு, 12 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் முதல் பட்டப்படிப்பு, முதுநிலைப் பட்டப்படிப்பு, பொறியியல், ஐ.டி.ஐ. மற்றும் பாலிடெக்னிக் படித்த



வேலைநாடுநர்கள் வரை அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு பயன் பெறலாம். முகாமில் பங்கேற்க வருபவர்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ரேஷன் அட்டை,ஆதார்அட்டை, சாதிச் சான்றிதழ் மற்றும் கல்வித்தகுதிச்சான்றிதழ்களின் நகல்களை கொண்டு வர வேண்டும். மேலும், தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெற விரும்புவோர் WWW.TNPRIVATEJOBS.TN.GOV.IN என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். வேலைவாய்ப்பு முகாம் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 04175 233381 என்ற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி, தங்களது கல்வித் தகுதி மற்றும் திறமைக் கேற்றவேலைவாய்ப்பை பெறும் வகையில் முகாமில் திரளாக கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டுள்ளார்.

### செய்யாறில் பள்ளி மாணவர்கள் அபார சாதனை:

# 167 புள்ளிகளுடன் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்று அசத்தல்




திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சிறு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற குறுவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில், 40க்கும் மேற்பட்ட பள்ளிகள் பங்கேற்ற நிலையில், செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் சிறப்பான திறமையை வெளிப்படுத்தி 167 புள்ளிகளுடன் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கைப்பற்றி சாதனை படைத்தனர். பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் மாணவர்கள் சிறப்பாக விளையாடி அதிக புள்ளிகளைப் பெற்றதன் மூலம், ஒட்டு மொத்த சாம்பியன் கோப்பையைதங்கள்பள்ளிக்கு பெற்றுத் தந்தனர். இதன் மூலம் அவர்கள் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர்.

வெற்றி பெற்ற மாணவர்களை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயகாந்தன் தலைமையில் ஆசிரியர்கள் பாராட்டி, மாவட்ட அளவிலான போட்டிகளிலும் சிறப்பாக விளையாடி பள்ளிக்கு பெருமை சேர்க்க வாழ்த்தினர்.

### வாகன ஓட்டிகள் அவதி:

# தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 'லாகின்' பிரச்சினை

## 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் சாலையில் நிறுத்தம்





தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தின்மூலம் வாகனப்பதிவு, புதுப்பித்தல், தகுதிச்சான்று உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக தினந்தோறும் ஏராளமான வாகனங்கள் ஆய்வுக்கு கொண்டு வரப்படுகின்றன. இந்நிலையில், திங்கட்கிழமை 50 க்கும் மேற்பட்ட புதிய மற்றும் புதுப்பித்தல் வாகனங்கள், சரக்கு வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு வாகனங்கள் குத்துக்கல்வலசை–இலஞ்சி சாலையில் ஆய்வுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஆனால், வாகனப் பதிவு மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்கான ஆன்லைன் 'லாகின்' திறக்கப்படாததால், வாகன ஆய்வு மற்றும் பதிவு தொடர்பான பணிகள் தாமதமானதாக கூறப்படுகிறது. இதனால் பல மணி நேரமாக காத்திருந்த வாகன ஓட்டிகள் மற்றும் உரிமையாளர்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

குறிப்பாக சரக்கு வாகனங்கள் உள்ளிட்ட வணிக நோக்கில் இயக்கப்படும் வாகனங்களின் பணிகள் தாமதமானதால், வருமான இழப்பும், தேவையற்ற காத்திருப்பு நேரமும் ஏற்பட்டதாக வாகன உரிமையாளர்கள் தெரிவித்தனர். வாகன ஆய்வுக்காக சாலையோரத்தில் அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் நீண்ட நேரம் நிறுத்தப்பட்டதால், அப்பகுதியில் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டது. வாகனப் பதிவு மற்றும் புதுப்பித்தல் பணிகள் தடையின்றி நடைபெற, ஆன்லைன் லாகின் உள்ளிட்ட தொழில்நுட்ப பிரச்சினைகளை உடனடியாக சரிசெய்து, பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருக்காத வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் மற்றும் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# மொழிப்போர் தியாகியுமான எம்.பி. நடராஜன் முதலாம் ஆண்டு நினைவு நாள்

சென்னை வடகிழக்கு மாவட்டம் 21வது வட்ட திமுக செயலாளரும் மாவட்ட பிரதிநிதியும் மொழிப் போர் தியாகியுமான எம்.பி. நடராஜன் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கழக கொடியேற்றி, கல்வெட்டை திறந்து வைத்து, 300 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளருமான மாதவரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் மாதவரம் தொகுதி பொன்னியம்மன்மேட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திமுக நிர்வாகிகள் மிசா. பா. மதிவாணன், மாதவரம் தெற்கு பகுதி துணைச் செயலாளர் இ. மோகன், 29வது வார்டு மாமன்ற உறுப்பினர் கார்த்திக் திருநாவுக்கரசு, வட்டச் செயலாளர்கள் அன்பின் மகேஷ், எல்.ஜி. செல்வம், பா.அசோக்குமார், பா.ஜ. நரசிம்மன் மற்றும் கோ.நெடுஞ்செழியன், டி.எஸ். இளங்கோவன், எல்.இளங்கோ, தமிழ்மாரி, ஹெச். ரவிக்குமார், எம்.பி. நடராஜன் குடும்பத்தைச் சேர்ந்த பழனிவேல்ராஜன், மதன்மோகன் உள்ளிட்ட பொது மக்கள், திமுக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.





ஒன்றிய பிஜேபி அரசின் தொழிலாளர் விரோத கொள்கைகளை கண்டித்து சிஐ டி யூ, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கம்,10.08.2026 பழனி தலைமை தபால் அலுவலகம் மறியல் போராட்டம்.தலைமை தோழர்கள் கே.அருள்செல்வன்,அஇவிதொச மாவட்ட செயலாளர்,எம். ராமசாமி, தவிச மாவட்ட செயலாளர், சி.பாலச்சந்திர போஸ், சி ஐ டி யூ ,மாவட்ட தலைவர் உட்பட இருநூறு பேர் கைது செய்யப்பட்டனர்.

### அய்யலூர் அருகே அரசு உயர்நிலைப் பள்ளி குடிநீர் தொட்டியில் மனித கழிவு பள்ளி வளாகத்தில்

# சந்தேகத்திற்கிடமாக சுற்றித்திரிந்த வாலிபரை தர்ம அடி கொடுத்து போலீசாரிடம் ஒப்படைத்த பொதுமக்கள்



அய்யலூர் அருகே அரசு உயர்நிலைப் பள்ளி குடிநீர் தொட்டியில் மனித கழிவு பள்ளி வளாகத்தில் சந்தேகத்திற்கிடமாக சுற்றித்திரிந்த வாலிபரை தர்ம அடி கொடுத்து போலீசாரிடம் ஒப்படைத்த பொதுமக்கள்

திண்டுக்கல், அய்யலூர் அருகே தங்கமாபட்டி அரசு உயர்நிலைப் பள்ளி குடிநீர் தொட்டியில் நேற்று மனித மலக்கழிவும், எச்சரிக்கை துண்டு காகிதமும் இருந்தது. இதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,கோட்டாட்சியகள் உள்ளிட்டோர் விசாரணை மேற்கொண்டனர்.

இந்நிலையில் பள்ளி வளாகத்தில் நேற்று இரவு மர்ம நபர் சுற்றித்திரிந்ததால் பொதுமக்கள் தர்ம அடி கொடுத்து வடமதுரை போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

வடமதுரை போலீசார் பல்வேறு கோணங்களில் அந்த நபரிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் அந்த நபர் வேதாரண்யம் பகுதியை சேர்ந்தவர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன

# போதை இல்லா தமிழ்நாடு பிரச்சாரம் ; அரசுப்பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சி

மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் கீழ், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு – திருவள்ளூர் மற்றும் SHELTER TRUST இணைந்து "NASHA MUKT BHARAT ABHIYAAN – DRUGFREE TAMIL NADU CAMPAIGN" (போதையில்லா தமிழ்நாடு பிரச்சாரம்) என்ற தலைப்பில் போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை 10.08.2026 அன்று நடத்தினர்.

இந்நிகழ்ச்சி மாதவரம் தொகுதி வடகரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, வடகரை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் செங்குன்றம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய மூன்ற பள்ளிகளில் நடைபெற்றது. பள்ளி மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள், அதன் உடல் மற்றும் மனநல பாதிப்புகள் மற்றும் போதைப் பழக்கத்திலிருந்து விலகி ஆரோக்கியமான வாழ்க்கையை மேற்கொள்வதன் அவசியம்குறித்துவிழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

வடகரை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், மாணவிகள் பங்கேற்ற போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி பள்ளி வளாகத்திற்குள் நடைபெற்றது. மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி, போதைப்பொருளுக்கு எதிரான கருத்துகளை முழக்கங்களாக எழுப்பி, சக மாணவர்களிடையே போதைப்பொருள் தடுப்பு குறித்து திருவள்ளூர் குழந்தைகள் நலக்குழு தலைவர் எஸ். தென்பாண்டியன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் வி. எழிலரசி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு உரையாற்றினர்.

வடகரைஅரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட "சிங்கப்




பெண்" துணை காவல் ஆய்வாளர் ஜெயந்தி பிரபாகரன், மாணவர்களுக்கு போதைப்பொருள் தடுப்பு,சட்டத்தின்விளைவுகள் மற்றும் போதைப் பழக்கத்திலிருந்து மாணவர்கள்தங்களைபாதுகாத்துக் கொள்வது குறித்து சிறப்பான விழிப்புணர்வு உரையாற்றினார்.

மேலும், ஷெல்டர் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் ஏ.டி. சாலமோன் ராஜ் சிறப்பு விருந்தினர்களை கௌரவித்தார். மனநல ஆலோசகர் கே.கார்த்திக், பி.குமார் ஆகியோர் மாணவர்களுடன் விழிப்புணர்வு கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக விழிப்புணர்வு காணொளி, சிறப்பு பொம்மலாட்ட நிகழ்ச்சி மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஆகியவை நடைபெற்றன. சிறப்பு பொம்மலாட்ட நிகழ்ச்சியை பி.ரமேஷ் குமார் மற்றும் குழுவினர் வழங்கினர். மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று போதைப்பொருள் இல்லாதசமூகத்தைஉருவாக்க உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில்மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்புப் பிரிவை சேர்ந்த மலர், சைல்டு லைன் பணியாளர்கள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், உதவி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் சுமார் 700 மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவில் மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது. மாணவர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதுடன், அவர்களை ஆரோக்கியமான மற்றும் பொறுப்பானவாழ்க்கைமுறைக்கு வழிநடத்தும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, "போதையில்லா தமிழ்நாடு – ஆரோக்கியமான எதிர்காலம்" என்ற விழிப்புணர்வு செய்தியை வலியுறுத்தியது.

# நல்லூர் காந்திநகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடிமாத தீமிதி திருவிழா

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி காந்திநகர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 49ம் ஆண்டு ஆடி மாத திருவிழா மற்றும் 16ஆம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய தலைவர் ஞானசேகர், செயலாளர் வழக்கறிஞர் சீனிவாசன், பொருலாளர் வழக்கறிஞர் தேவராஜ், துணைத்தலைவர்கள் சுகுமாரன், குமார், சுரேஷ், கோபால், துணை செயலாளர்கள் சிவா, ரமேஷ், அசோக், இணை செயலாளர்கள் முருகேசன், யுவராஜ், கணக்கு தணிக்கையாளர்கள் ரமேஷ், ஞானசேகர், கௌரவத் தலைவர்கள் சக்கரையப்ப நாடார், மாயவன், கிருஷ்ணன், ஏழுமலை, கிருஷ்ணன், கௌரவ ஆலோசகர்கள் கோதண்டன், சங்கரலிங்கம், கலைபாபு உள்ளிட்ட ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் கங்கைநீர் எடுத்தல், பால்குடம் எடுத்தல், அம்மனுக்கு காப்புகட்டுதல்,பூங்கரகம் எடுத்தல், அலகு பானை எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல், கூழ்வார்த்தல், கும்பம் படையல் பூஜை, தாய்வீட்டு சீதனம் எடுத்தல், மற்றும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரத்துடன் மஹா தீபாராதனை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

பின்னர் சுமார் 300க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இரங்கி தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு



ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் உள்ளிட்ட குளிர்பானங்கள் வழங்கப்பட்டது.

முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது.



மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா திருவண்ணாமலை மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை புரிந்ததையொட்டி திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் புத்தகம் வழங்கி வரவேற்றார்.

## செங்கோட்டையில் மறியல் போராட்டம்:

# 100 நாள் வேலை வழங்க வேண்டும்; விவசாய கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்

100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து வேலை வழங்க வேண்டும், விவசாயிகள் பெற்றுள்ள கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும், தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.26,000 குறைந்தபட்ச கூலியை சட்டமாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, செங்கோட்டையில் இன்று மறியல் போராட்டம் நடைபெற்றது.




செங்கோட்டை தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் CITU, AIKS, AIAWU, AIDWA, DYFI மற்றும் SFI ஆகிய அமைப்புகளின் செங்கோட்டை தாலுகா குழுக்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கின்றனர்.

மேலும், தேனி மாவட்டத்தில் 98 கிராம மக்கள் வெளியேற்றப்படுவதாக கூறப்படும் விவகாரம் தொடர்பாகவும், உச்சநீதிமன்ற உத்தரவு குறித்தும் மத்திய அரசு தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

100 நாள் வேலைத் திட்டத்தைப் பாதுகாத்தல், விவசாயிகளின் கடன் சுமையை குறைத்தல், தொழிலாளர்களுக்கு உரிய குறைந்தபட்ச ஊதியம் வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளில் மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குடற்புழு தொற்றில்லா தலைமுறையை உருவாக்குவோம்:

# திருவண்ணாமலையில் 8.08 லட்சம் குழந்தைகள், பெண்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள்

### மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

தேசிய குடற்புழு நீக்க நாளையொட்டி, திருவண்ணாமலை மாவட்டத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் பணியை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலை மாநகராட்சி ஜெய் பீம் நகரில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மாணவர்களுக்கு அல்பெண்டசோல் குடற்புழு நீக்க மாத்திரைகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.



தேசிய குடற்புழு நீக்க நாளையொட்டி, மாவட்டத்தில் 1 முதல் 19 வயது வரையிலான 6,22,626 குழந்தைகள் மற்றும் 20 முதல் 30 வயதுக்குட்பட்ட 1,85,758 பெண்கள் என மொத்தம் 8,08,384 பேருக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இந்த மாத்திரைகள் வழங்கப்படாது. இன்று மாத்திரை பெறத் தவறியவர்களுக்கு வரும் 17.08.2026 அன்று மீண்டும் வழங்கப்படும். 1 முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 200 மி.கி. அல்பெண்டசோல் மாத்திரையும், 2 முதல் 19 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 20 முதல் 30 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு 400 மி.கி. அல்பெண்டசோல் மாத்திரையும் வழங்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள துணை சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இம்மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. கிராம சுகாதார செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். குடற்புழு தொற்றை தடுப்பதன் மூலம் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலை மற்றும் உடல் ஆரோக்கியம் மேம்படுவதுடன், உடற்சோர்வு, ரத்த சோகை, கற்றல் சிரமம் உள்ளிட்ட பிரச்சினைகளைத் தவிர்க்கவும், கல்வித்திறனை மேம்படுத்தவும் உதவும் என சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

தொடர்ந்து, குடற்புழு தொற்றை குறைத்து வளமான எதிர்காலத்தை உருவாக்கும் வகையில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் தேசிய குடற்புழு தொற்று தடுப்பு நாள் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

ஆண்டுக்கு இரண்டு முறை குடற்புழு நீக்க மாத்திரைகளை உட்கொள்வதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாடு, உடற்சோர்வு, கற்றல் சிரமம் மற்றும் நோய்த் தொற்றுகளைத் தடுக்க முடியும் என்பதையும், உடல் வளர்ச்சி, அறிவுத்திறன் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி மேம்படும் என்பதையும் உணர்ந்து செயல்படுவதாக உறுதிமொழி ஏற்றனர்.

மேலும், சுற்றுப்புற த்தை தூய்மையாக வைத்திருத்தல், கழிப்பறையை முறையாகப் பயன்படுத்துதல், உணவு உண்பதற்கு முன்பும் பின்பும் கைகளை சோப்பால் கழுவுதல் மற்றும் திறந்தவெளியில் மலம் கழிப்பதைத் தவிர்த்தல் உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவ தாகவும் உறுதியளித்தனர்.

பொது சுகாதாரத்துறை, பள்ளிக்கல்வித்துறை, ஒருங்கிணைந்தகுழந்தைகள் வளர்ச்சித் திட்டம், சமூக நலத்துறை, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஊட்டச்சத்துத் துறை பணியாளர்கள் இணைந்து மாவட்டம் முழுவதும் இப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் வெங்கட்ராமன், முதன்மைக்கல்வி அலுவலர் முனிராஜ், உதவி திட்ட மேலாளர் டாக்டர் ரமணன், மாவட்ட தாய்சேய் நல அலுவலர் நித்யா, வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ்.புவனேஸ்வரி, மருத்துவ அலுவலர் டாக்டர் பர்வீன் பானு, சுகாதார ஆய்வாளர்கள் ஆர்.ராஜேஷ், எஸ். ஜெயச்சந்திரன், பகுதி சுகாதார செவிலியர் சுந்தரி, கிராம சுகாதார செவிலியர் காந்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சி, வி.எம். நகர் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் இயங்கும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககம் சார்பில் தேசிய குடற்புழு நீக்க நாள் கடைப்பிடிக்கும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா, பள்ளி மாணவியர்களுக்கு குடற்புழு நீக்கத்திற்கான மாத்திரைகளை வழங்கினார். மாவட்ட சுகாதார அலுவலர் (திருவள்ளூர்) மரு.பிரியாராஜ், பள்ளி தலைமையாசிரியர் ஏ.எம்.செல்வி, திருவள்ளூர் வட்டாட்சியர் சரண்யா, ஆசிரியர்கள், திரளான பள்ளி மாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## செய்யாறு பகுதியில் தீவிரமடையும் திண்டிவனம்

# நகரி ரயில் பாதை பணிகள் 130 கி.மீ. வேகத்தில் ரயில்கள் இயக்கும் வகையில் கட்டமைப்பு





திண்டிவனம்–நகரி இடையே அமைக்கப்பட்டு வரும் புதிய அகல ரயில் பாதை திட்டத்தின் ஒரு பகுதியாக, செய்யாறு சுற்றுவட்டாரப் பகுதிகளில் ரயில்வே மேம்பாலம் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டின் திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் ஆந்திர மாநிலத்தின் சித்தூர் மாவட்டத்தின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையிலும், ஆற்காடு, செய்யாறு, வந்தவாசி உள்ளிட்ட பகுதிகளை ரயில் போக்குவரத்து வசதியுடன் இணைக்கும் வகையிலும் கடந்த 2006ம் ஆண்டு திண்டிவனம்–நகரி புதிய அகல ரயில் பாதை திட்டம் அறிவிக்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் தொடங்கும் இந்த புதிய ரயில் பாதை, திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, திருவள்ளூர் மாவட்டங்கள் வழியாக ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தில் உள்ள நகரியை சென்றடையும் வகையில் அமைக்கப்படுகிறது. இந்த வழித்தடத்தில் மணிக்கு 130 கிலோ மீட்டர் வேகத்தில் ரயில்களை இயக்கும் வகையில் ரயில் பாதை மற்றும் அதற்கான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

செய்யாறு பகுதியில் பணிகள் செய்யாறு பகுதியில் ஏற்கனவே காழியூர் அருகே செய்யாற்றின் குறுக்கே பிரமாண்ட ரயில்வே மேம்பாலம் கட்டப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இதனைத் தொடர்ந்து ஆரணி, செய்யாறு சுற்றுவட்டாரப் பகுதிகளில் ரயில் பாதைக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் அருகாவூர், கண்ணுகாபுரம், குளமந்தை உள்ளிட்ட பகுதிகளிலும் சிறிய அளவிலான ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் பாலங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் இப்பகுதிகளில் ரயில் பாதை அமைக்கும் பணிகள் படிப்படியாக வேகம் பெற்று வருகின்றன. 22க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் திண்டிவனம்–நகரி புதிய ரயில் பாதையில் திண்டிவனம், வெள்ளிமேடுபேட்டை, தெள்ளார், வந்தவாசி, எருமைவெட்டி, செய்யாறு, இருங்கூர், மாம்பாக்கம், மாமண்டூர், இரும்பேடு, ஆரணி, தாமரைப்பாக்கம், திமிரி, ஆற்காடு, ராணிப்பேட்டை, வாலாஜா சாலை சந்திப்பு, கொடைக்கல், சோளிங்கர், ஆர்.கே.பேட்டை, அத்திமஞ்சரிபேட்டை, பள்ளிப்பட்டு, பொதட்டூர் பேட்டை, நகரி உள்ளிட்ட இடங்களில் ரயில் நிலையங்கள் அமைய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டு வரும் இந்த ரயில் பாதை திட்டம் நிறைவேற்றப்பட்டால் செய்யாறு, ஆற்காடு, வந்தவாசி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பொது மக்களுக்கு புதிய ரயில் போக்குவரத்து வசதி கிடைப்பதுடன், இப்பகுதிகளின் தொழில், வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அம்மையநாயக்கனூர் அருகே

# சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்த நபர் கைது



திண்டுக்கல் மாவட்டம் அம்மையநாயக்கனூர் காவல் நிலைய ஆய்வாளர் சாகுல்ஹமீது தலைமையில் சார்பு ஆய்வாளர் சேகர் மற்றும் காவலர்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது பள்ளப்பட்டி, சுடுகாடு அருகே சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்த பள்ளப்பட்டி மேற்கு தெருவை சேர்ந்த சரவணன்(40) என்பவரை கைது செய்து அவரிடமிருந்து 35 மதுபானம் பாட்டில்களை பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# 8 ஆண்டுகளாக அடிப்படை வசதியின்றி தவிக்கும் மக்கள்

### குடிநீர், சாலை வசதி கேட்டு மாவட்ட ஆட்சியரிடம் மனு

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே உள்ள புன்னையாபுரம் கணபதிநகர் பகுதியில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக குடிநீர், சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி பல்வேறு இன்னல்களை சந்தித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, மழைக்காலங்களில் மண் சாலை சேறும் சகதியுமாக மாறுவதால், பள்ளி மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் சிரமத்துடன் நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊராட்சி அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பலமுறை புகார் அளித்தும் இதுவரை உரிய நடவடிக்கை



எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டினர்.

இந்நிலையில், தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்ப்பு கூட்டத்தில், கணபதிநகர் பகுதி மக்கள் நேரில் கலந்து கொண்டு, தங்கள் பகுதிக்கு குடிநீர், சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை உடனடியாக செய்து தரக்கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

# 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி செய்யாறில் சாலை மறியல்

### 39 பெண்கள் உள்பட 114 பேர் கைது

தொழிலாளர் விரோத 4 சட்டங்களை கைவிட வேண்டும் உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்திய தொழிற்சங்கத்தின் சார்பில் செய்யாறில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.



இதில் 39 பெண்கள் உள்பட 114 பேரை போலீசார் கைது செய்தனர்.

செய்யாறு பேருந்து நிலையம் முன்பு நடைபெற்ற மறியல் போராட்டத்தில், தொழிலாளர் விரோத 4 சட்டங்களை ரத்து செய்ய வேண்டும், விபி ராம்ஜி திட்டத்தை கைவிட வேண்டும், விவசாயிகளுக்கு சட்டப்பூர்வ குறைந்தபட்ச ஆதார விலை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொழிற்சங்கத்தினர் கோஷங்கள் எழுப்பினர்.

மேலும், தொழிலாளர்களுக்கு 8 மணி நேர வேலை உத்தரவாதம் அளிக்க வேண்டும், சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும், அங்கன்வாடி மையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும், ஊழியர்கள் பற்றாக்குறையை போக்க வேண்டும், ஒப்பந்த முறையை ரத்து செய்து ஒப்பந்த ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளையும் வலியுறுத்தினர்.

அகில இந்திய அளவில் நடைபெற்ற சிறை நிரப்பும் போராட்டத்தின் ஒரு பகுதியாக இந்த மறியல் போராட்டம் நடைபெற்றதாக தொழிற்சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட 39 பெண்கள் உள்பட 114 பேரை செய்யாறு போலீசார் கைது செய்தனர். பின்னர் கைது செய்யப்பட்ட அனைவரும் தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

# செய்யாறில் சமூக நீதி மாணவர் இயக்க ஆலோசனைக் கூட்டம்



திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், செய்யாறு நகர தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பில் சமூக நீதி மாணவர் இயக்கத்தின் ஆலோசனைக் கூட்டம் செய்யாறில் நடைபெற்றது. தமுமுக நகர அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு சமூக நீதி மாணவர் இயக்க மாவட்ட பொருளாளர் தமீம் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் ஜமால் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். நகரத் தலைவர் கமால், துணைத் தலைவர் ஜஹாங்கீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாணவர் இயக்கத்தின் தற்போதைய செயல்பாடுகள், அமைப்பை மேலும் வலுப்படுத்துவது மற்றும் மாணவர்களிடையே சமூக நீதி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

மேலும், சமூக நீதி மாணவர் இயக்கத்தின் எதிர்கால செயல்திட்டங்கள் மற்றும் அமைப்பின் முன்னேற்றம் குறித்து விரைவில் விரிவான உள்ளரங்க ஆலோசனைக் கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. இதில் பகுலுதீன், ஹாரூண், அஸ்லாம், முஹமத்சைபுதீன், சதாம், அஹ்மத் யாசீன், உமர் முக்தார், அப்துல்ரஹீமான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் அமித்ஷா சாமி தரிசனம்:

# ரமண ஆசிரமத்தில் சிறப்பு பூஜையில் பங்கேற்பு; வழிநெடுகிலும் பாஜக தொண்டர்கள் உற்சாக வரவேற்பு

மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா நேற்று முன்தினம் திருவண்ணாமலைக்கு வருகை தந்து, உலகப் புகழ்பெற்ற அருணாசலேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து கிரிவலப்பாதையில் அமைந்துள்ள ரமண ஆசிரமத்திற்குச் சென்று சிறப்பு பூஜையில் கலந்து கொண்டார்.

அமித்ஷாவின் வருகையை முன்னிட்டு திருவண்ணாமலை மாநகரம், அருணாசலேஸ்வரர் கோவில், கிரிவலப்பாதை மற்றும் அவர் பயணிக்கும் முக்கிய பகுதிகள் முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து போலீசார் வரவழைக்கப்பட்டு, 1,500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மராட்டிய மாநிலத்தில் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்ட அமித்ஷா விமானம் மூலம் சென்னை வந்தார். பின்னர் சென்னையில் இருந்து மாலை 4.15 மணியளவில் ஹெலிகாப்டர் மூலம் திருவண்ணாமலைக்கு புறப்பட்டார். மாலை 5.20 மணியளவில் திருவண்ணாமலை அடிஅண்ணாமலை உண்ணாமலை நகரில் அமைக்கப்பட்டிருந்த ஹெலிபேடில் ஹெலிகாப்டர் தரையிறங்கியது.

அங்கு மாவட்ட கலெக்டர் வந்தனா கார்க், அமித்ஷாவை வரவேற்றார். இதையடுத்து பாதுகாப்பு வாகனங்கள் புடைசூழ அமித்ஷா காரில் அருணாசலேஸ்வரர் கோவிலுக்கு புறப்பட்டார்.

முதலில் ரமண ஆசிரமத்திற்கு செல்வதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பயணத் திட்டத்தில் திடீர் மாற்றம் செய்யப்பட்டு அமித்ஷா நேரடியாக அருணாசலேஸ்வரர் கோவிலுக்கு சென்றார். மாலை 5.30 மணியளவில் பே கோபுரம் வழியாக கோவில் வளாகத்திற்குள் சென்ற அவருக்கு, கோவில் நிர்வாகம் சார்பில் தலைமை குருக்கள் பி.டி.ரமேஷ் தலைமையிலான சிவாச்சாரியார்கள் பூரணகும்ப மரியாதையுடன் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

கோவிலுக்குள் சென்ற அமித்ஷா முதலில் சம்பந்த விநாயகரை வழிபட்டார். பின்னர் அருணாசலேஸ்வரர் சன்னதிக்குச் சென்று சாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து உண்ணாமலை அம்மன் சன்னதியிலும் வழிபாடு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து கோவிலில் நடைபெற்ற சாயரட்சை பூஜையில் கலந்து கொண்ட அமித்ஷா, அருணாசலேஸ்வரர் மற்றும் உண்ணாமலை அம்மனுக்கு நடைபெற்ற அபிஷேகத்தை தரிசனம் செய்து மனமுருக வழிபட்டார். கோவில் நிர்வாகம் சார்பில் அவருக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

கோவில் வழிபாட்டை முடித்துக் கொண்ட அமித்ஷா பே கோபுரம் வழியாக வெளியே வந்தார். அப்போது கோவில் அருகே திரண்டிருந்த பாஜக தொண்டர்கள் மற்றும் பொதுமக்களை பார்த்து கையசைத்து உற்சாகப்படுத்தினார்.

பின்னர் அங்கிருந்து காரில் ரமண ஆசிரமத்திற்கு புறப்பட்டார். கிரிவலப்பாதையின் இருபுறங்களிலும் திரண்டிருந்த பாஜக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மாலை 6.30 மணியளவில் ரமண ஆசிரமத்தை சென்றடைந்த அமித்ஷா, அங்கு நடைபெற்ற சிறப்பு பூஜையில் கலந்து கொண்டு வழிபாடு செய்தார். ஆசிரமத்தில் சிறிது நேரம் செலவிட்ட அவர், பின்னர் மாலை 6.55 மணியளவில் காரில் புதுச்சேரிக்கு புறப்பட்டுச் சென்றார்.





அமித்ஷாவின் வருகையையொட்டி திருவண்ணாமலை நகரம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. முக்கியசந்திப்புகள், கோவில் சுற்றுப்பகுதிகள், கிரிவலப்பாதை உள்ளிட்ட இடங்களில் போலீசார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது மாவட்ட கலெக்டர் வந்தனா கார்க், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு உதயகுமார், புதிய நீதிக்கட்சி நிறுவனத் தலைவர் ஏ.சி.சண்முகம், பாஜக மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி, மாவட்ட தலைவர் கே.ரமேஷ், திருவண்ணாமலை சட்டமன்ற பொறுப்பாளரும் கூட்டுறவு பிரிவு மாநில செயலாளருமான தி.அறவாழி, மாநில செயற்குழு உறுப்பினர் ஜெ.கே.ஆர். கருணாகரன், மாவட்ட துணைத்தலைவர் பி.கிருஷ்ணமூர்த்தி, மாநகர தலைவர் மாந்தோப்பு எம்.ராஜா, மாவட்ட பொதுச் செயலாளர்கள் ரமேஷ், ஜெய்நாத், கவிதா, மாவட்ட துணைத்தலைவர்கள் சேகர், சிவசங்கரன், மாநகரதலைவர் சந்தோஷ் பரமசிவம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

ஓட்டப்பிடாரம் தமிழக வெற்றி கழகத்தின் வடக்கு ஒன்றிய நிர்வாகிகளுடன்

# கட்சி வளர்ச்சி பணிகள் குறித்து சிறு குறு தொழில்துறை அமைச்சர் மதன் ராஜா ஆலோசனை

ஓட்டப்பிடாரம் தமிழக வெற்றி கழகத்தின் வடக்கு ஒன்றிய நிர்வாகிகளுடன் கட்சி வளர்ச்சி பணிகள் குறித்து சிறு குறு தொழில்துறை அமைச்சர் மதன் ராஜா ஆலோசனை நடத்தினார்,

ஒட்டப்பிடாரத்தில் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் ஆணைக்கேற்ப தூத்துக்குடி புறநகர் மாவட்ட தவெக செயலாளரும் சிறு குறு தொழில் துறை அமைச்சருமான மதன் ராஜா தலைமையில் நடைபெற்ற தமிழக வெற்றிக்கழக கட்சி வளர்ச்சிப் பணிகள் செய்வது குறித்த ஆலோசனைகூட்டத்தில் ஒட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய தவெக, செயலாளர் ஏ டி கே ஆறுமுக கிருஷ்ணன், மற்றும் அவர் தலைமையில் வந்திருந்த வடக்கு ஒன்றியத் துக்குட்பட்ட கிளை செயலாளர்களுடன் தவெக கட்சியின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் மக்கள் பணிகள் செய்வது ஆலோசனைக்





குறித்து, தவெக கட்சி நிர்வாகிகளுக்கு தூத்துக்குடி புறநகர் மாவட்ட செயலாளரும் தமிழக சிறுகுறு தொழில்துறை அமைச்சருமான மதன் ராஜா, ஆலோசனை, வழங்கினார்,

இந்த தவெக கட்சி கூட்டத்தில் ஒட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ டி கே ஆறுமுக கிருஷ்ணன் தலைமையில் கிளைச் செயலாளர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட தவெக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# சிஓசி மெடிக்கல்ஸ், புழல் மனிதநேய லயன்ஸ் சங்கம், அப்போலோ மருத்துவமனை, சங்கரா நேத்ராலயா கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச மருத்துவ முகாம்

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு சிஓசி மெடிக்கல்ஸ், புழல் மனிதநேய லயன்ஸ் சங்கம், அப்போலோ மருத்துவமனை, சங்கரா நேத்ராலயா கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச இதயம் மற்றும் பொது மருத்துவம், கண் அறுவை சிகிச்சை பரிசோதனை முகாம் தீர்த்தக்கிரியம்பட்டு சேரன் தெருவில் சிஓசி மெடிக்கல்ஸ் உரிமையாளர் ஏ.சாது சிஓசி ரேவதி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.





புழல்மனிதநேயலயன்ஸ் சங்க மாவட்டத் தலைவர் பாலாஜி, சங்கத் தலைவர் ஹேமாத்ரி, செயலாளர் முரளி, பொருளாளர் ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக சிஓசி மெடிக்கல்ஸ் உரிமையாளர்கள் ஸ்ரீநாத், ஸ்ரீகாந்த், பிரபா, சரண் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் கவிதா டேவிட்சன், அந்தோணி, ஆங்காடு முன்னாள் தலைவர் காமராஜ், திமுக ஒன்றியச் செயலாளர் அண்ணாதுரை, 1வது வார்டு முன்னாள் உறுப்பினர் வேளாங்கண்ணி சரவணன், சமூக சேவகர் செங்குட்டுவன், வாத்தியார் முனுசாமி, மலையப்பன், தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி செயலர் உல்லாசம், சதீஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு இலவச மருத்துவ முகாமை துவக்கி வைத்து இலவச மருந்து மாத்திரைகளை வழங்கினார்.

முதுநிலை ஆசிரியர் வி.பி. தேவராஜுலு சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு சிஓசி மெடிக்கலைத் திறந்து வைத்தார்.

இமுகாமில் உயரம், எடை, இரத்த அழுத்தம், இரத்தத்தில்சர்க்கரைஅளவு, ஈசிஜி, எஃகோ, கண் பரிசோதனை உள்ளிட்டவைகள் இலவசமாக பரிசோதிக்கப்பட்டு மருத்துவர்கள் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. 120க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

KGF ராபர்ட்சன்பேட்டை ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தின் 92வது ஆண்டு ஆடித்திருவிழா:

# 601 பால்குட ஊர்வலத்தில் பங்கேற்று பக்தைகளுக்கு ஆதரவளித்த ஆர்.கே. பவுண்டேஷன் தலைவர் மோகன் கிருஷ்ணா

கே.ஜி.எஃப் ராபர்ட்சன்பேட்டை பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தின் 92வது ஆண்டு ஆடித்திருவிழா, பக்தி பரவசத்துடனும் ஆன்மிக உற்சாகத்துடனும் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

92 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த பாரம்பரிய திருவிழா, ராபர்ட்சன்பேட்டை பகுதி மக்களின் ஆன்மிக நம்பிக்கையையும், ஸ்ரீ மாரியம்மன் மீது அவர்கள் கொண்டுள்ள ஆழமான பக்தியையும் வெளிப்படுத்தும் முக்கிய விழாவாக இருந்து வருகிறது.

இந்தநிலையில், ஆடித்திருவிழாவின் முக்கிய நிகழ்வாக 601 பால்குடம் ஏந்திய பக்தைகளின் சிறப்பு ஊர்வலம் இன்று காலை வெகு விமரிசையாக நடைபெற்றது.

அம்மன் மீது கொண்ட பக்தியுடனும், நம்பிக்கையுடனும் ஏராளமான பெண்கள் பால்குடங்களை ஏந்தி சிறப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். முக்கிய வீதிகள் வழியாக பக்தி முழக்கங்களுடன் நடைபெற்ற இந்த ஊர்வலம், இறுதியாக அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தை சென்றடைந்தது.



ஊர்வலம் நடைபெற்ற பகுதிகளில் பக்தர்கள் திரண்டிருந்தனர். அம்மனைப் போற்றும் பக்தி முழக்கங்களும், ஆன்மிக பாடல்களும் ஒலித்ததால், ராபர்ட்சன்பேட்டை பகுதி முழுவதும் விழாக்கோலம் பூண்டது. இந்த சிறப்பு பால்குட ஊர்வலத்தில் ஆர்.கே. பவுண்டேஷன் தலைவரும் சமூக சேவகருமான திரு. மோகன் கிருஷ்ணா அவர்கள் கலந்து கொண்டு பக்தர்களுடன் இணைந்து விழாவை சிறப்பித்தார்.

பால்குடம் ஏந்தி வந்த பக்தைகளுக்கு தனது ஆதரவையும் வாழ்த்துகளையும் தெரிவித்த மோகன் கிருஷ்ணா, அவர்களை அன்புடன் வரவேற்று வழியனுப்பி வைத்தார். ஆன்மிக விழாக்களில் பொதுமக்களுடன் இணைந்து பங்கேற்பதுடன், சமூகநலன் சார்ந்த நிகழ்வுகளிலும் தொடர்ந்து பங்களித்து வரும் ஆர்.கே. பவுண்டேஷன்சார்பில் மோகன் கிருஷ்ணாவின் பங்கேற்பு, இந்த விழாவுக்கு மேலும் சிறப்பு சேர்த்தது. 601 பால்குடம் ஏந்திய பக்தைகளின் ஊர்வலம் ஆலயத்தை சென்றடைந்ததைத் தொடர்ந்து, பக்தர்கள் ஸ்ரீ மாரியம்மனை தரிசனம் செய்து சிறப்பு வழிபாடுகளில் கலந்து கொண்டனர். பால்குடத்தில் கொண்டு வரப்பட்ட பாலை அம்மனுக்கு சமர்ப்பித்து, குடும்ப நலன், ஆரோக்கியம், மகிழ்ச்சி, வளம் உள்ளிட்ட பல்வேறு வேண்டுதல்களை பக்தர்கள் முன்வைத்தனர். “அம்மன் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்... அனைத்து குடும்பங்களிலும் மகிழ்ச்சி, ஆரோக்கியம், அமைதி மற்றும் வளம் பெருகட்டும்” என்று பக்தர்கள் மனமுருகி பிரார்த்தனை செய்தனர். கே.ஜி.எஃப் பகுதி மட்டுமின்றி, சுற்றுவட்டார பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் இந்த ஆடித்திருவிழாவில் கலந்து கொண்டனர். இதனால் ராபர்ட்சன்பேட்டை பகுதி முழுவதும் ஆன்மிக உற்சாகமும்,திருவிழாகொண்டாட்டமும்நிறைந்துகாணப்பட்டது. 92 ஆண்டுகளாக தொடரும் ஆன்மிக பாரம்பரியம்

ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தின் 92வது ஆண்டு ஆடித்திருவிழா என்பது ஒரு சாதாரண விழா அல்ல. பல தலைமுறைகளாக பக்தர்களால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஆன்மிக பாரம்பரியத்தின் அடையாளமாக இந்த விழா திகழ்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பக்தர்கள் ஒன்றிணைந்து அம்மனை வழிபட்டு, தங்களது குடும்ப நலனுக்காகவும், சமூகத்தின் நலனுக்காகவும் பிரார்த்தனை செய்து வருகின்றனர். இந்த ஆண்டும் சிறப்பு பூஜைகள், ஆன்மிக நிகழ்ச்சிகள், அன்னதானம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இன்று நடைபெற்ற 601 பால்குட ஊர்வலம், இந்த 92வது ஆண்டு ஆடித்திருவிழாவின் முக்கிய நிகழ்வாக அமைந்தது. நூற்றுக்கணக்கான பெண்கள் பால்குடம் ஏந்தி அம்மனை நோக்கி ஊர்வலமாக சென்ற காட்சி, பக்தர்களிடையேபெரும் ஆன்மிக உணர்வை ஏற்படுத்தியது. அம்மன் மீது பக்தர்கள் கொண்டுள்ள நம்பிக்கையும், பாரம்பரியத்தை தொடர்ந்து பாதுகாக்கும் அவர்களின் ஆர்வமும், இந்த நிகழ்வின் மூலம் மீண்டும் ஒரு முறை வெளிப்பட்டது.

மேலும், ஆர்.கே. பவுண்டேஷன் தலைவர் மோகன்கிருஷ்ணாஅவர்களின் பங்கேற்பும், பக்தைகளுக்கு வழங்கிய ஆதரவும் விழாவின் சிறப்பை மேலும் உயர்த்தியது. இன்றைய 601 பால்குட ஊர்வலம், பக்தி... பாரம்பரியம்... ஒற்றுமை... ஆகியவற்றை ஒருங்கிணைத்த சிறப்புமிக்க ஆன்மிக நிகழ்வாக அமைந்தது.

92 ஆண்டுகளாக தொடர்ந்து வரும் இந்த ஆடித்திருவிழா, இனிவரும் தலைமுறைகளுக்கும் சிறப்பாக தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதே பக்தர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருவருளால் அனைவரது இல்லங்களிலும் மகிழ்ச்சி, ஆரோக்கியம், அமைதி மற்றும் வளம் பெருகட்டும். ஆர்.கே. பவுண்டேஷன் தலைவர் மோகன்கிருஷ்ணாஅவர்களின் வாழ்த்துகளுடன், ஸ்ரீமாரியம்மன்திருவருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்!





# தாடிக்கொம்பு பகுதியில் திருட்டு வழக்கில் இருவர் கைது

## 3 பவுன் தங்க நகைகள் பறிமுதல்

திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட சென்னமநாயக்கன்பட்டி, திருப்பதி பாலாஜிநகரில் கடந்த 20.07.2026 அன்று இரு வீடுகளில் புகுந்து தங்க நகைகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S. ஜெயக்குமார், இ.கா.ப., உத்தரவின்பேரில், ஊரக உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் சங்கர் மேற்பார்வையில், ஆய்வாளர் சரவணன் தலைமையிலான தனிப்படை போலீசார் CCTV காட்சிகள் மற்றும் பல்வேறு தகவல்களின் அடிப்படையில் விசாரணை நடத்தினர்.

இதையடுத்து திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சிவலிங்கம் (40), தமிழரசன் (26) ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 3 பவுன் தங்க நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். திண்டுக்கல் மாவட்ட காவல்துறை தொடர்ந்து தீவிர கண்காணிப்பு மற்றும் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

# பாடியநல்லூர் இளஞ்சூரியன் சார்பில் 5 ஆம் ஆண்டாக இன்னிசைக் கச்சேரி

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய 84ஆம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழாவை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றிய திமுக மாணவரணி துணை அமைப்பாளரும் ஜோதிநகர் கிளை செயலாளருமான சே.முத்துக்குமார் ஏற்பாட்டில்பாடியநல்லூர்இளஞ்சூரியன் 5ஆம் ஆண்டாக திரைப்பட பின்னணிப் பாடகர் கானா மைக்கேல், சாகுல் ரிதம்ஸ் இன்னிசைக் கச்சேரி ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இந்த இன்னிசைக் கச்சேரியில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளரும் சோழவரம் ஊராட்சி ஒன்றிய முன்னாள் துணைப் பெருந்தலைவருமான மீ.வே.கர்ணாகரன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். பாடியநல்லூர் இளஞ்சூரியன் தலைவர் சே.முத்துகுமார், செயலாளர் அன்பு சாந்தி பில்டிங் கன்ஸ்ட்ரக் ஷன் ஏ.விஜயகுமார், பொருளாளர் பெட்ரோல் பங்க் உரிமையாளர் டி.தீனா ஆகியோர் இன்னிசைக் கச்சேரி நிகழ்ச்சி ஏற்பாட்டை மிகச் சிறப்பாக செய்திருந்தனர். இதில் ஆலய நிர்வாகிகள், மகளிர் குழுவினர், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு இன்னிசைக் கச்சேரியை கண்டு ரசித்தனர்.







Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA